முருகப்பெருமான் துணை

**மகான் ஆண்டாள் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.06.2021, வியாழக்கிழமை

1. கலியின் கட்டங்கள் கருதி
   கருணையிலா பூலோகம் தன்னுள்
   பழிபாவ செயல்கள் கூடியே
   பலியிடும் சமூக அவலங்கள் எண்ணி
2. எண்ணியே மீட்பு வேண்டி
   இந்த யுகத்தை மாற்றம் செய்ய
   வண்ணமதாய் வானவர்கள் வேண்டி
   வரமீந்து அவதாரம் நிகழ்த்தி இருக்க
3. இருக்கின்ற ஆறுமுக அரங்கஞானியின்
   இணையிலா மாதவத்தின் பலமே
   வருத்தம் போக்கும் சக்தியாக இருக்க
   வணங்கியே அரங்கன் பெருமைகூறி
4. கூறியே யோகபிரசன்ன ஆசியை
   குறையிலா பிலவ நள்ளிதிங்கள்
   தெரிவிக்க சூலதிகதி குருவாரம்
   (பிலவ வருடம் ஆனி மாதம் 3ம் நாள், 17.06.2021, வியாழக்கிழமை)
   தேசிகனுக்கு ஆண்டாள் யானும்
5. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான தருமவழிகளை காட்டும்
   ஞானதேசிகன் மார்க்கம் ஏற்று
   நம்பகம் வைத்து தொடர்ந்துவர
6. வருகவே சமூக அவலங்கள்
   வதைகள் வஞ்சனைகள் விலகும்
   தருமபலமும் முருகப்பெருமான் அருளும்
   தக்க துணையாக உலகோர்க்குவரும்
7. வருமுலகில் ஞானிகள் பூசையும்
   வள்ளல் தன்மையும் பெருகிவர
   பேருலகம் அமைதியும் பாதுகாப்பும்
   பேரிடரையும் வென்று மீளும்
8. மீளவே தொண்டர்படை பெருக்கி
   மேலான சேவை ஆற்றி
   காலமதை ஞானவழியில் கனிய
   கருணை கொண்டு அருளும் ஞானி
9. ஞானி அரங்கன் கரங்கள்பட
   ஞான தீட்சை ஏற்ற மக்கள்
   ஞானிகள் துணை மிகுதி கண்டு
   ஞானிகளாகும் வாய்ப்பு பெறுவர்

10. வாய்ப்பு தந்து வழிகாட்டியருளும்
வள்ளலான அரங்க ஞானியின்
மெய்ஞானம் உலகை மாற்றும்
முழுமையான ஞானஆட்சி தரும்

11. தருமவான்கள் படை பெருகிட
தன்னலமிலா தலைமை உருவாகி
பெருமைமிக்க ஞானிகள் ஆட்சி
பேருலகமே கண்டடைந்து சிறக்கும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–